Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய்க்கிழமை, ஜூலை 30, 2024 | இதழ் 108

# கேரளா மாநிலம் முழுவதும் கனமழை வயநாட்டில் நிலச்சரிவு: 67 பேர் பலி; 100 பேர் மாயம் மீட்பு பணியில் இந்திய ராணுவ வீரர்கள், ஹெலிகாப்டர்கள், தேசிய பேரிடர் மீட்பு படை இறந்தவர் குடும்பத்துக்கு ரூ.2 லட்சம்: மோடி அறிவிப்பு

சென்னை, 30 ஜூலை 2024: வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் உயிரிழப்பு 67 ஆக அதிகரித்துள்ளது. தொடர்ந்து மழை பெய்து வருவதாலும், பாலம் சேதம் அடைந்துள்ளதாலும் மீட்புப் பணியில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் 100-க்கும் மேற்பட்ட மக்கள் சிக்கித் தவிப்பதாகத் தெரிகிறது.

மீட்பு பணியில் தேசிய பேரிடர் மீட்பு படையினர், 225 ராணுவ வீரர்கள் ஈடுபட்டு உள்ளனர். விமானப்படை ஹெலிகாப்டர்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கேரளாவில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. கடந்த சில வாரங்களாக அங்கு கனமழை வெளுத்து வாங்கி வருகிறது. அந்த வகையில், கேரளாவின் வயநாடு பகுதியில் நேற்று இரவு மிகக் கனமழை பெய்தது. இந்த கனமழையை தொடர்ந்து அதிகாலையில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இன்று அதிகாலை 2 மணி முதல் காலை 6 மணி வரையிலான 4 மணிநேரத்தில் பெரிய நிலச்சரிவு ஏற்பட்டது. முண்டக்கை டவுன், மேப்பாடி மற்றும் சூரல்மலா ஆகிய 3 இடங்களில் கடுமையான நிலச்சரிவு ஏற்பட்டது.

அடுத்தடுத்து ஏற்பட்ட நிலச்சரிவுகளால் வைத்திரி, வெள்ளேரிமலை உள்ளிட்ட பகுதிகலும் பயங்கர பாதிக்கப்பட்டது. அட்டமலா முண்டக்கையை இணைக்கும் ஒரே பாலம் வெள்ளம், நிலச்சரிவில் சேதமடைந்த நிலையில் மீட்புப் பணிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் தனித்தீவில் சிக்கியது போல 500 வீடுகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு மாட்டிக்கொண்டுள்ளனர். சூரல்மலா பகுதியில் மட்டும் 400க்கு மேற்பட்ட வீடுகளில் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிக்கிக் கொண்டுள்ளதாக தெரிகிறது. பல நூறு வாகனங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் தெரிகிறது. பல வீடுகள் மண்ணோடு மண்ணாக அடித்து செல்லப்பட்டன.

நிலச்சரிவில் சிக்கி இதுவரை பலியானோர் எண்ணிக்கை 67 ஆக உயர்ந்துள்ளது. மண்ணில் புதைந்த சடலங்கள் மீட்கப்பட்டு வரும் நிலையில் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என தெரிகிறது. இதனிடையே நூற்றுக்கணக்கானவர்களை காணவில்லை என தகவல் வெளியாகி உள்ளது.



நிலச்சரிவு ஏற்பட்ட உடன் உடனடியாக ராணுவத்தின் உதவி கோரப்பட்டது. இதனையடுத்து காலாட்படை பட்டாலியனைச் சேர்ந்த 225 பேர் மீட்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். மருத்துவ அதிகாரிகள் குழு தலைமையில் 40 பேர் அடங்கிய குழுவினர் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளனர்.

குன்னூர் கண்டோன்மென்டில் இருந்தும் 2 குழுவினர் வயநாடு சென்றனர். தேசிய பேரிடர் மீட்பு குழுவினரும் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

விமானப்படைக்கு சொந்தமான ஏஎல்எச் மற்றும் எம்ஐ 7 ஹெலிகாப்டர்களும், சாரங் வகை ஹெலிகாப்டர்களும் மீட்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

முண்டக்கை டவுன் பகுதியில் அரசின் 2 ஹெலிகாப்டர்கள் தரையிறங்க முயற்சித்தது. ஆனால், காலநிலை மோசமாக இருப்பதால், அங்கு தரையிறங்க முடியாமல் மீண்டும் கோழிகோட்டுக்கு திரும்பியது.

நிலச்சரிவில் சிக்கியுள்ளவர்களை கண்டுபிடிக்க மாயா மற்றும் மர்பி போலீஸ் மோப்ப நாய் வரவழைக்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்டவர்களில் நூற்றுக்கும் மேற்பட்டோர் மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றவர்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தேசிய சுகாதார இயக்கம் சார்பில் உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. நிலச்சரிவு தொடர்பாக 9656938689 மற்றும் 8086010833 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் ஒரேநாளில் 20 செ.மீ. அளவு மழை பெய்ததால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினை தொடர்ந்து நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது. மேலும் இன்றும் கேரளாவின் வயநாடு உள்ளிட்ட பல பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கேரளா நிலச்சரிவு தொடர்பாக அம்மாநில முதலமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வயநாட்டு நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்க தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. நிலச்சரிவு குறித்த தகவல் கிடைத்ததும் அரசு இயந்திரம் அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது. 5 அமைச்சர்கள் வயநாட்டிற்கு விரைந்துள்ளனர்" என்று கூறியுள்ளார்.

கேரளாவில் அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சி பி ஐ எம்-ன் மாநில செயற்குழு கூட்ட தீர்மானம்

சென்னை, 30 ஜூலை 2024: இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)-யின் தமிழ்நாடு மாநில செயற்குழு கூட்டம் இன்று (30.07.2024) சென்னையில் மாநில செயற்குழு உறுப்பினர் கே.சாமுவேல்ராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன், மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மத்தியக்குழு உறுப்பினர்கள் பி.சம்பத், உ.வாசுகி, பெ.சண்முகம் மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.

**தீர்மானம் 1 :**

**வயநாட்டில் நிலச்சரிவு : 80க்கும் மேற்பட்டோர் பலியான துயரம்!**

**சிபிஐ(எம்) மாநில செயற்குழு இரங்கல்!**

**சிபிஐ(எம்) தமிழ்நாடு மாநிலக்குழு ரூ. 10 லட்சம் நிவாரண உதவி!**

கேரள மாநிலம் வயநாட்டில், எதிர்பாராமல் பெய்த அதிகனமழையும், அதன் காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவும் 80 உயிர்களை பறித்துள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் உயரலாம் என அச்சமூட்டும் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இயற்கைப் பேரிடரில் சிக்கி உயிரிழந்த மக்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநில செயற்குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை கடந்த சில நாட்களாகவே தொடர்ந்து வருகிறது. நேற்று முதல் மழை குறையும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், திடீரென பெய்த அதிகனமழை வயநாடு பகுதியில் நிலச்சரிவை ஏற்படுத்தியது. சூரல்பாறை, வெளரிமலை, முண்டகயில்,



பொத்துகலு உள்ளிட்ட பகுதிகள் நிலச்சரிவால் பாதித்துள்ளன. பல பகுதிகள் அணுக முடியாத வகையில் துண்டிக்கப்பட்டுள்ளன.

மழைவெள்ள முகாம் அமைந்திருந்த பகுதியிலும் நிலச்சரிவின் பாதிப்பு ஏற்பட்டதால் ஏராளமான உயிர்கள் ஆபத்தில் சிக்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இன்னும் மழை குறையாத நிலையில் மீட்புப் பணிகளை கேரள அரசு முழு வேகத்தில் முடுக்கி விட்டுள்ளது. இருப்பினும், இதுவரை 80 உயிர்கள் இந்த பேரிடரில் சிக்கி பலியாகியுள்ளார்கள்.

**மீட்புப் பணிகளில் உடன் நிற்கிறோம் !**

அரசின் அனைத்து முகமைகளும் ஒருங்கிணைக்கப்பட்டு மீட்புப் பணிகளை முடுக்கி விட்டிருப்பதாக கேரள முதலமைச்சர் தெரிவித்துள்ளார். இந்திய ராணுவம், விமானப் படை மற்றும் கப்பற்படையும் மீட்புப் பணிகளுக்கு வரவழைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு நிவாரணப் பணிகளுக்கு நிதி உதவி அளித்திருப்பதையும், மூத்த ஐஏஎஸ் அதிகாரிகளை உதவிக்கு அனுப்பியிருப்பதையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு வரவேற்கிறது. ஒன்றிய அரசு ஏற்பட்டுள்ள பேரிடருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டுமென மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்குழு சார்பில் ரூபாய் 10 லட்சம் நிவாரண பணிகளுக்கு அனுப்புவது என்று தீர்மானித்துள்ளது. மேலும், துயருறும் மக்களுக்கு நிவாரண நிதி வசூலித்து அனுப்பிட வேண்டுமெனவும் கட்சியின் மாவட்டக்குழுக்களை கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் 2 :**

**வாழ்வாதாரம் மற்றும் தொழிலாளர் கோரிக்கைகளை முன்வைத்து போராடுவோரை கைது செய்வது நியாயமல்ல!**

தமிழ்நாட்டில் அண்மைக் காலங்களில் ஜனநாயகப் போராட்டங்கள், ஊர்வலங்கள் தடுக்கப்படுகின்றன. காவல்துறை பேராட்டம் நடத்துவோரை பெரும் குற்றவாளிகளாக கருதி கைது செய்வதும், அராஜக அத்துமீறல் நடவடிக்கைகளை செய்வதும், கடந்த அதிமுக ஆட்சியில் நடந்தது. அதை மக்கள் புறக்கணித்தனர். இந்நிலையில், காவல்துறை அணுகுமுறை அவ்வப்போது, ஜனநாயக விரோதமாக தலையெடுப்பது நல்லதல்ல. திமுக தனது தேர்தல் வாக்குறுதியில் அளித்தவற்றை அமலாக்கக் கோரி அணிதிரள்வோரை அடக்கி ஒடுக்க காவல்துறை முயல்வது நியாயமற்றது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்களை தேடி மருத்துவம் என்ற திட்டத்தில் பணி செய்யும் ஊழியர்கள், சென்னையில் பேரணி நடத்தி அரசிடம் முறையீடு செய்ய 29.07.2024 அன்று அவரவர் ஊரில் இருந்து புறப்பட்ட 15 ஆயிரம் பெண் ஊழியர்களை காவல்துறை தடுத்து நிறுத்தி உள்ளது. கும்பகோணம், தர்மபுரி, விழுப்புரம் ஆகிய நகர்களில் ரயில் நிலையத்தில் தடுத்து நிறுத்தி உள்ளனர். தேனி, திருச்சி, திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்தவர்களை காவல்துறை 30.07.2024 அன்று மறைமலை நகர், பரனூர் ஆகிய பகுதிகளில் தடுத்து நிறுத்தி கைது செய்துள்ளனர்.

பெண் ஊழியர்களை போதுமான பெண் காவலர்களை கொண்டு பேசாமல், ஆண் காவலர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்து அராஜகமாக செயல்பட்டு உள்ளனர். அதிகாலையில் குற்றவாளிகளைப் போல் பெண் ஊழியர்களை தடுத்து நிறுத்தியதும், அவர்களின் இயற்கைத் தேவை குறித்து கவலை கொள்ளாமலும், மனித உரிமையை அவமதித்து, கைது செய்தது கண்டிக்கத்தக்கது. காவல் துறையினரின் மேற்படி அத்துமீறலையும், மனித உரிமை மீறலையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு கண்டிக்கிறது.

சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற ஆசிரியர் போராட்டங்களும், அமைப்பு சாரா தொழிலாளர் போராட்டங்களும் காவல்துறையால் ஜனநாயக விரோதமாக ஒடுக்கப்பட்டு பங்கேற்ற ஊழியர்கள் கைது செய்யப்படுகின்றனர். இப்போது மக்களை தேடி மருத்துவ ஊழியர்களும் கைது செய்து தடுக்கப்பட்டுள்ளனர். தலைநகர் சென்னையில் பேரணி நடத்துவது, ஒன்று கூடுவது, அமைச்சர்களை சந்தித்து பேசுவது குற்றமாக கருதி முன் எச்சரிக்கை என்ற பெயரில் கைது செய்யும் போக்கை மாநில அரசு மேற்கொள்ளக் கூடாது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
செவ்வாய்க்கிழமை,
ஜூலை 30, 2024

# தமிழ் திரையுலகின் முன்னணி நகைச்சுவை நடிகரான யோகி பாபு கதையின் நாயகனாக நடிக்கும் 'போட்' திரைப்படம் ஆகஸ்ட் 2 அன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது

சென்னை, 30 ஜூலை 2024: சிம்பு தேவன் இயக்கத்தில் உருவாகி இருக்கும் 'போட்' திரைப்படத்தில் யோகி பாபு, கௌரி கிஷன், சின்னி ஜெயந்த், குலப்புளி லீலா, எம். எஸ். பாஸ்கர், சாம்ஸ், மதுமிதா, ஷாரா, மாஸ்டர் அக்ஷத் தாஸ் ஆகியோருடன் ஹாலிவுட் நடிகர் ஜெஸ்ஸி ஃபோக்ஸ்-ஆலன் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். மாதேஷ் மாணிக்கம் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு ஜிப்ரான் வைபோதா இசையமைத்திருக்கிறார். நடுக்கடலில் உருவான நெய்தல் நில கதையான இப்படத்தை மாலி & மான்வி மூவி மேக்கர்ஸ் மற்றும் சிம்பு தேவன் என்டர்டெய்ன்மென்ட் சார்பில் பிரபா பிரேம்குமார் மற்றும் சி. கலைவாணி தயாரித்திருக்கிறார்கள். இந்த திரைப்படத்தின் டீசர், இரண்டு பாடல்கள், ப்ரோமோ பாடல், முன்னோட்டம் ஆகியவை வெளியாகி படத்தைப் பற்றிய பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இந்நிலையில் பத்திரிகையாளர் சந்திப்பு சென்னையில் நடைபெற்றது. இதில் நிர்வாக தயாரிப்பாளர் ஜிதேந்திரன், இயக்குநர் சிம்பு தேவன், ஒளிப்பதிவாளர் மாதேஷ் மாணிக்கம், இசையமைப்பாளர் ஜிப்ரான் வைபோதா, நடிகர்கள் யோகி பாபு, எம். எஸ். பாஸ்கர், சாம்ஸ், மாஸ்டர் அக்ஷத் தாஸ், நடிகைகள் மதுமிதா, கௌரி கிஷன் ஆகியோர்கள் கலந்து கொண்டனர். இயக்குநர் சிம்பு தேவன் பேசுகையில், "நான் இதுவரை இயக்கிய திரைப்படங்கள் அனைத்தும் ஃபேண்டஸி, காமெடி என வித்தியாசமான வகைமையில் இருக்கும். இந்த படத்திலும் இவை இரண்டும் இடம்பெற்றிருக்கின்றன. இந்த நல்ல வாய்ப்பை மாலி & மான்வி மூவி மேக்கர்ஸ் தயாரிப்பாளர் பிரேம்குமார் தான் வழங்கினார். அவரை முதன்முதலாக சந்தித்து அரை மணி நேரம் இந்த கதையை விவரித்தேன். இந்தக் கதை என் மனதில் நீண்ட நாளாக இருக்கும் கதை. கொரோனா காலகட்டத்தின் போது நான் எழுதிய 'கசடதபற' எனும் படைப்பு வெளியானது. அந்தத் தருணத்திலேயே 'போட்' கதையை எழுதிக் கொண்டிருந்தேன். இந்த கதையை தயாரிப்பாளரிடம் சொன்ன போது, 'இதில் இடம் பெறும் உணர்வும், வித்தியாசமும் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இதனை என்னிடம் விவரித்தது போல் படமாக உருவாக்கி தாருங்கள்' எனக் கேட்டுக் கொண்டார். என் மீது நம்பிக்கை வைத்து தயாரிப்பாளர் சொன்ன அந்த வார்த்தை தான் இதன் தொடக்க புள்ளி. இந்தப் படத்தில் நானும் தயாரிப்பாளராக இணைந்திருக்கிறேன். இந்த கதைக்கு யார் நாயகன் என தேடும்போது நான் ஏற்கனவே யோகி பாபுவுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருந்தேன். அவரை ஒரு முறை மீண்டும் சந்தித்து இக்கதையை விவரித்தேன். அவருக்கும் பிடித்திருந்தது. 'இதில் நான் நடிக்கிறேன்' என்றார். அதன் பிறகு அனைத்து பணிகளும் விரைவாக நடைபெற்றன. யோகி பாபுவை தொடர்ந்து எம் எஸ் பாஸ்கர், சின்னி ஜெயந்த் ஆகியோர் ஒப்பந்தமானார்கள். கௌரி கிஷன் - இந்த திரைப்படத்தில் கதாநாயகியாக அழுத்தமான வேடத்தில் நடித்திருக்கிறார். அதன் பிறகு சாம்ஸ், மதுமிதா, ஷா ரா, அக்ஷத் ஆகியோரும், ஜெஸ்ஸி என்ற வெளிநாட்டு நடிகரும் நடிக்க ஒப்பந்தமானார்கள். அதன் பிறகு பாட்டி கேரக்டரில் குலப்புளி லீலா நடித்தார்கள். இந்த வயதிலும் அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பை வழங்கினார். இப்படி திறமையான கலைஞர்கள் ஒரு பக்கம் ஒன்றிணைந்தார்கள். இவர்களுக்கு நிகராக என்னுடைய இனிய நண்பர் எஸ். ஆர். கதிர் மூலம் ஒளிப்பதிவாளர் மாதேஷ் மாணிக்கம் அறிமுகமாகி, எங்களுடன் இணைந்தார். இந்தத் திரைப்படத்தை பொருத்தவரை இசையும் , ஒளிப்பதிவும் மிகவும் முக்கியமானவை. ஏனெனில் கடல் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அனைவரையும் போல நானும் கடல் என்றால் அதன் கரையில் நின்று பாதத்தை நனைத்துக் கொண்டும், உற்சாகம் மிகுதியானால் கூடுதலாக பத்து அடி உள்ளே சென்று நீராடவும் மட்டும் தான் தெரியும். அதனால் இந்த படத்தில் என்ன கஷ்டங்கள் வரும் என்று எனக்குத் தெரியாது. எனவே என்னுடைய குழு வலிமையானதாக இருக்க வேண்டும் என தீர்மானித்தேன். மாதேஷிடம் முதன்முறையாக சந்தித்து உரையாடிய போது, 'இதில் நாம் ஏராளமான தடைகளை எதிர்கொள்ள வேண்டியதிருக்கும்' என்று சொன்னேன். அந்தத் தருணத்தில் நான் எந்த படப்பிடிப்பு தளத்திற்கும் சென்று பார்வையிட்டு தேர்வு செய்யவில்லை. அலுவலகத்தில் அமர்ந்து கதையை மட்டும் ரசித்து ரசித்து எழுதினேன். கதை எழுதுவது எளிது. அதனை செயல்படுத்தும் போதும் நடைமுறைப்படுத்தும் போதும் தான் அதன் கடினம் தெரியும். எழுதிய கதையை காட்சிப்படுத்துவதற்காக குழுவாக நிறைய மெனக்கடல் இருந்தது. இது கடினம் என்று தெரியும். இருந்தாலும் விரிவாக இதைப்பற்றி சிந்திக்கவில்லை. இந்தப் படத்தின் கலை இயக்குநராக பணியாற்றிய சந்தானம் இன்று நம்மிடம் இல்லை. மறைந்துவிட்டார். இருந்தாலும் அவர்தான் இந்த கதைக்கான காட்சிப்படுத்துதலின் அடித்தளத்தை உருவாக்கினார். படத்தொகுப்பு பணிகளை தினேஷ் பொன்ராஜ் கவனித்துக் கொண்டார். இப்படி ஒரு திறமையான தொழில்நுட்பக் கலைஞர்கள் குழு எனக்கு பக்க பலமாக இருந்து செயல்பட்டனர். கதைப்படி போட் மூன்று நாள் கடலுக்குள் இருக்கும். இதனால் நடிகர்களுக்கு உடை பற்றிய கவலை இல்லை. அனைவருக்கும் ஒரே உடை தான். ஆனாலும் படப்பிடிப்பின் போது நடிகர்கள் அணிந்திருந்த ஆடை பாழானது. இந்த விஷயத்தில் நட்சத்திரங்கள் கஷ்டப்பட்டனர். இந்தப் படத்தின் திரைக்கதைக்கு 1943ம் ஆண்டு காலகட்டத்திய பின்னணியை அமைத்திருந்தோம். ஏனெனில் பொதுவாகவே வரலாற்றில் நம் விஷயங்கள் மறைக்கப்படுகிறது என்ற ஆதங்கம் என்னுள் இருக்கிறது. சுதந்திர போராட்டத்தை பொறுத்தவரை மும்பையையும், டெல்லியையும் முதன்மைப்படுத்தும் அளவிற்கு சென்னையையும், கொல்கத்தாவையும் கண்டு கொள்வதில்லை. ஆனாலும்பரவாயில்லை, இது தொடர்பாக நம் வரலாறு குறித்து ஆய்வு செய்ய தொடங்கினேன். குறிப்பாக இரண்டாம் உலக போர். 1943ம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாம் உலகப் போர் குறித்த விவரங்களையும், ஆவணங்களையும் பார்வையிட தொடங்கினேன். இதில் திரைப்படங்களையும் இணைத்துக் கொண்டேன். டொரண்டீனோவின் ஆங்கில திரைப்படத்திலிருந்து பல திரைப்படங்கள் வரை இரண்டாம் உலகப்போர் குறித்த குறிப்புகளில் எதிலும் இந்தியர்கள் இடம்பெறவில்லை. ஆனால் சரித்திரத்தின்படி இரண்டாம் உலகப்போரில் 25 லட்சம் இந்தியர்கள் இறந்திருக்கிறார்கள். இதுதான் எனக்கு கிடைத்த முதல் தகவல். இதிலிருந்து உந்துதலை பெற்று இரண்டாம் உலக போர் பற்றிய ஒரு கதை கருவினை உருவாக்கி, அதனை படைப்பாக்க வேண்டும் என திட்டமிட்டேன். அந்த காலகட்டத்தில் சென்னை மீது ஜப்பான் குண்டு வீச தயாராக இருந்திருக்கிறது. இதற்கான எச்சரிக்கை வெளியாகி ஆறு மாத காலம் வரை மக்கள் கடும் துன்பங்களை அனுபவித்திருக்கிறார்கள். இது தொடர்பாக லண்டனில் உள்ள என்னுடைய நண்பர் ஸ்ரீ கணேஷ் மற்றும் பெங்களூருவில் உள்ள நண்பர் ஜெயராஜ் ஆகியோருடன் விவாதிக்கத் தொடங்கி, தகவல்களை சேகரிக்கத் தொடங்கினோம். அந்தத் தருணத்தில் சென்னையிலிருந்து ஐந்து லட்சம் மக்கள் வெளியேறி இருக்கிறார்கள். சென்னையிலிருந்து எழுபது சத மக்கள் வெளியேறி விட்டார்கள். மீதமிருந்த மக்கள் காவல்துறையின் அறிவுறுத்தலின்படி பதுங்கு குழிகளில் பதுங்கியபடி வாழ பழகியிருந்தார்கள். இது தொடர்பாக மக்களுக்கு போலீசார் பயிற்சி அளித்து இருந்தனர். எந்த அரசு அலுவலகமும் செயல்படவில்லை. உணவுப் பொருட்கள், அத்தியாவசிய பொருட்கள் இவை அனைத்தும் ஒரு பொது இடத்தில் வைத்து வியாபாரம் செய்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு மக்கள் கஷ்டங்களை அனுபவித்து இருக்கிறார்கள். இந்த தகவல்களை எல்லாம் சேகரித்து, விவாதித்து அதன் பிறகு இது தொடர்பாக படைப்பை உருவாக்கலாம் என திட்டமிட்டோம். அந்த காலகட்டத்தில் துடுப்பு படகு தான் இருந்தது. 1980களுக்கு முன்னர் வரை துடுப்பு படகைத் தான் மீனவர்கள் பயன்படுத்தினார்கள். துடுப்பு படகை உருவாக்குவதற்கு கலை இயக்குநர் சந்தானம் கேரளா, ராமேஸ்வரம் என பல இடங்களுக்கு அலைந்து திரிந்து படத்தில் இடம்பெற்ற துடுப்பு படகை வடிவமைத்தார். இந்தக் கதையை எழுதும் போது நன்றாக இருந்தது. ஒரு படகில் பத்து பேர் அமர்ந்திருக்கிறார்கள் என எழுதினேன். ஆனால் இதனை படமாக்கும் போது என்னைவிட நடிகர்கள் சிரமப்பட்டார்கள். நாங்கள் வடிவமைத்த 'போட்'டில் நடிகர்கள் அமர்ந்து விடுவார்கள். ஆனால் அவர்களால் நகரவோ.. அசையவோ இயலாது. அந்த அளவிற்கு நெருக்கடியாக இருந்தது. அதன் பிறகு படப்பிடிப்பு தளத்தை தேடி தமிழக கடற்கரையோரம் முழுவதும் பயணித்தோம். இறுதியாக திருச்செந்தூர் அருகே அமைந்துள்ள உவரியை தேர்ந்தெடுத்தோம். இங்குதான் முதற்கட்ட படப்பிடிப்பை தொடங்கினோம். அடர்ந்த வனப் பகுதியில் படப்பிடிப்பை நடத்தி இருக்கிறோம், உயர்ந்த மலைப் பகுதியில் படப்பிடிப்பை நடத்தி இருக்கிறோம். இங்கெல்லாம் கடினம் இருந்தாலும், பிறகு பழகிவிடும். ஆனால் கடல் என்பது ஒவ்வொரு நிமிடமும் புதிராக இருந்தது. எதையுமே தீர்மானிக்க இயலாது. முதலில் எங்களுக்கு எதுவும் புரியவில்லை. மாதேஷ் ஒரு காட்சியை படமாக்க தொடங்குவார். அதை காட்சிப்படுத்துவதற்குள் கடல் அலையின் காரணமாக நட்சத்திரங்களின் ஒத்துழைப்பு கிடைக்காமல் நிறைவு செய்ய இயலாது. எங்களுக்கும், கடலுக்கும் இடையேயான ஒரு ரிதம் கிடைப்பதற்கு நான்கு நாட்கள் ஆனது. நடிகர்களுக்கு நீச்சல் தெரியாது. தொழில்நுட்ப குழுவினர்களில் பலருக்கும் நீச்சல் தெரியாது. அதனால் அந்த மீனவ கிராமத்தில் உள்ள இளைஞர்களை எங்களுக்கு உதவியாக அமர்த்திக் கொண்டோம். அவர்கள் எங்களுக்கு உதவி செய்வதற்காக தொடர்ச்சியாக தண்ணீரில் இருந்ததால் அவர்களின் கை கால்கள் எல்லாம் ஊதி வெளுத்து விட்டன. ஏராளமான தருணங்களில் படப்பிடிப்பிற்கான உபகரணங்கள் வீணாகி இருக்கின்றன. இப்படி தொழில்நுட்ப ரீதியாக பல சவால்களை எதிர்கொண்டோம். ஒரு அலை வந்தால் எங்களுடைய எல்லா உழைப்பும் வீணாகிவிடும். ஒரு காட்சியை நிறைவு செய்வதற்குள் சூரிய ஒளியில் நிறைய மாறுபாடு ஏற்படும். நடிகர்களுக்கு இது மிகப்பெரும் சவாலாக இருந்தது. எனக்கு கடலுக்குள் இறங்கினாலே தலை சுற்றி விடும். ஆனால் நடிகர்கள் இவற்றையெல்லாம் கடந்து, படகில் அமர்ந்து கலகலப்பாக பேசிக் கொண்டிருப்பார்கள். சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால் இந்த படம் கடின உழைப்பால் உருவாகி இருக்கிறது. நான் மட்டுமல்ல ஒட்டுமொத்த குழுவினரும் வியர்வை சிந்தி உழைத்திருக்கிறார்கள். இப்படத்தின் படப்பிடிப்பு பெரிய அனுபவமாக இருந்தது. ஏனெனில் என்னைப் பொருத்தவரை கடல் என்பதை தனி உயிரினமாகத் தான் பார்க்கிறேன். சில நேரங்களில் கோபமாக இருக்கும். சில நேரங்களில் அமைதியாக இருக்கும். கடலின் வண்ணங்கள் மாறிக்கொண்டே இருக்கும். காலையில் தொடங்கி மாலைக்குள் இருபது வண்ணங்களை காணலாம். நாங்கள் எதை எல்லாம் சந்தித்தோமோ எங்களது அனுபவம் என்னவாக இருந்ததோ.. அவற்றை எல்லாம் காட்சிப்படுத்தி இருக்கிறோம். அதனால் இந்த திரைப்படம் சுவாரசியமாக இருக்கும். அனைத்து வகையிலும் ரசிகர்களை திருப்திப்படுத்தும் என நாங்கள் நம்புகிறோம். நடுக் கடலுக்கு சென்று படம் எடுத்தால் யார் வேண்டுமானாலும் கஷ்டப்பட்டு தான் ஆக வேண்டும். நாங்கள் மட்டும்தான் கஷ்டப்பட்டு படமாக்கினோம் என்று சொல்ல வரவில்லை. கடல் என்று சென்றாலே கஷ்டம் தான். நாங்கள் அனைவரும் கஷ்டப்பட்டு உருவாக்கியது ஒரு பாதி தான். மீதி பாதியை சென்னையில் ஒரு அரங்கத்தில் அமர்ந்து இசையமைப்பாளர் ஜிப்ரான் உருவாக்கினார். ஜிப்ரானுடன் இணைந்து பணியாற்றியது மறக்க இயலாத அனுபவம். படத்தை பார்ப்பதற்கு முன் அதைப்பற்றி அவர் பேசியதற்கும் படத்தை பார்த்த பிறகு கதையை உள்வாங்கி அவர் பணியாற்றிய விதமும் வித்தியாசமாக இருந்தது. கதைகளை அவர் உள்வாங்கி இசை மூலமாக வெளிப்படுத்தும் போது சிறப்பாக இருக்கும். ஒரு வகையில் பார்க்கும் போது, இது சிங்கிள் லொகேஷனில் எடுக்கப்பட்ட படமாக இருக்கும். அதை உடைத்து இசை வடிவில் ஒரு கதையை சொல்லி ரசிகர்களை அவர் வழி நடத்தும் விதம் பிரமிக்க வைத்தது. உண்மையிலேயே இந்த படத்தில் அவருடைய பங்களிப்பு சிறப்பானது. ஒளிப்பதிவாளர் மாதேஷ் மாணிக்கத்தின் கடும் உழைப்பு பாராட்டுக்குரியது. படத்திற்கு வண்ணக் கலவையை சீராக்கும் பணியை மேற்கொண்ட கலரிஸ்ட் பாலாஜியின் பங்களிப்பும் பாராட்டுக்குரியது. இவர் நவீன தொழில்நுட்பத்தின் மூலம் இந்த கதையை செழுமை படுத்தினார். சுரேன் மற்றும் அழகியகூத்தன் ஆகிய இரண்டு தொழில்நுட்ப கலைஞர்களும் இணைந்து ஒலி வடிவமைப்பில் சிறப்பாக பணியாற்றினார்கள். என்னுடைய குழுவின் பணியாற்றிய ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தயாரிப்பாளர் பிரபா பிரேம்குமார் அளித்த வாய்ப்பை ஏற்றுக்கொண்டு, யோகி பாபு நடிக்க ஒப்புக்கொண்டு, அவருடன் இத்தனை நட்சத்திரங்களும் தொழில்நுட்ப கலைஞர்களும் இணைந்து பணியாற்றி நல்லதொரு படைப்பாக 'போட்'டை உருவாக்கி இருக்கிறோம். நிச்சயமாக இந்த திரைப்படத்தை நீங்கள் திரையரங்குகளில் பார்க்கும் போது உங்களுக்கு பிடிக்கும் என்று நம்புகிறோம். எனக்கும், என்னுடைய குழுவினருக்கும் ஆதரவு தாருங்கள்," என்றார்.




நிர்வாக தயாரிப்பாளர் ஜிதேந்திரன் பேசுகையில், "போட் திரைப்படம் நன்றாக வந்திருக்கிறது. இயக்குநர் சிம்பு தேவன் அற்புதமாக இயக்கி இருக்கிறார். ஜிப்ரானின் இசையில் படம் நேர்த்தியாக அமைந்திருக்கிறது. இந்தப் படத்தில் நடித்த நடிகர்கள், நடிகைகள் , பணியாற்றிய தொழில்நுட்ப கலைஞர்கள், இயக்குநர் சிம்பு தேவன் உள்ளிட்ட அனைவருக்கும் தயாரிப்பாளர் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். 'போட்' திரைப்படம் ஆகஸ்ட் இரண்டாம் தேதியன்று திரையரங்குகளில் வெளியாகிறது திரையரங்கிற்கு வருகை தந்து ஆதரவு தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்," என்றார்.

நடிகர் எம். எஸ். பாஸ்கர் பேசுகையில், "சிம்பு தேவனின் இயக்கத்தில் பல படங்களில் நடித்திருக்கிறேன். இதில் 'இரும்பு கோட்டை முரட்டு சிங்கம்' படத்தில் நடிக்கும் போது கஷ்டப்பட்டேன். இந்த படத்திலும் நடிக்கும் போது கஷ்டப்பட்டேன். அந்தப் படத்தில் குதிரை என்றால் இந்த படத்தில் போட். தம்பி சிம்பு தேவன் சொன்னது போல் கடலை கணிக்க முடியவில்லை. திடீரென்று தண்ணீர் உள்வாங்குகிறது. திடீரென்று தண்ணீர் அதிகரிக்கிறது. திடீரென்று அலை அடிக்கிறது. போட்டில் அமர்ந்து நடிக்கும் போது முதுகு வலியும் ஏற்பட்டது. சிம்பு தேவன் பேசும் போது, 'எழுதுவது எளிதாக இருந்தது' எனக் குறிப்பிட்டார். ஆனால் இப்படி எழுத வேண்டும் என்று மனதிற்குள் தோன்ற வேண்டும் அல்லவா, அது கடினம் தானே. கற்பனையில் உதித்ததை எழுதி, அதற்காக படப்பிடிப்பு தளத்தை தேடி பயணித்து தேர்வு செய்து அதில் படபிடிப்பு நடத்தி நாங்கள் கொடுக்கும் தொல்லைகளை எல்லாம் பொறுத்துக் கொண்டு படமாக்கினார். படப்பிடிப்பு தளத்தில் நாங்கள் மகிழ்ச்சியாக இருந்தோம். இந்தப் படத்தின் படப்பிடிப்பு குடும்ப உறுப்பினர்களுடன் இன்பச் சுற்றுலா சென்றது போல் தான் இருந்தது. என்னுடன் நடித்த சக நடிகர்கள் அனைவரும் அதே போட்டில் தான் இருக்க வேண்டும். யாரும் எங்கும் செல்ல முடியாது. இந்தப் படத்தில் அவர் எனக்கு கொடுத்த வேடத்தில் நடிக்கும் போது, நான் யாரை குருவாக மனதிற்குள் நினைத்திருக்கிறேனோ.. அவருடைய சீடனாகவே நடிக்க கூடிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறேன். அது என்ன கதாபாத்திரம் என்பதை படம் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள். நான் ரசித்து ரசித்து செய்து கதாபாத்திரங்களில் இதுவும் ஒன்று," என்றார்.

நாயகி கௌரி கிஷன் பேசுகையில், "நல்ல படங்களில் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னைப் போன்ற வளரும் கலைஞர்களின் கனவாக இருக்கும். இந்தப் படத்தில் நடித்ததை பெருமிதமாக கருதுகிறேன். இந்தப் படத்தில் நடிக்கும் போது கஷ்டங்களும் சவால்களும் இருந்தன. இருந்தாலும் மகிழ்ச்சியாக அனுபவித்துக் கொண்டே படத்தின் பணிகளை நிறைவு செய்து இருக்கிறோம். இந்தப் படம் எப்போது வெளியாகும் என்று ஆவலுடன் காத்திருந்தோம். படத்தின் மேக்கிங் வீடியோவை பார்க்கும் போது அந்த தருணங்களை நினைத்து பெருமைப்படுகிறேன். இந்த வாய்ப்பை வழங்கிய இயக்குநர் சிம்பு தேவனுக்கு இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் படத்தில் லட்சுமி என்ற இளம் பெண் கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறேன். இந்த வேடத்தை ஏற்று நடிக்க முடியும் என்று என் மீது நம்பிக்கை வைத்தது பெரிய விஷயம். நான் தமிழ் பெண் அல்ல. கேரளாவில் பிறந்து தமிழ்நாட்டில் வளர்ந்த பெண். அதனால் ஓரளவிற்கு தான் தமிழ் பேசுவேன். இந்தப் படத்தில் செந்தமிழை பார்ப்பனர்களின் பேச்சு மொழியுடன் பேசி இருக்கிறேன். இதனை பேசும் போது எனக்குள் தயக்கம் இருந்தது. இருந்தாலும் இயக்குநர் அதனை உடைத்து உன்னால் முடியும் என்று நம்பிக்கை அளித்தார். படப்பிடிப்பு நடைபெற்ற படகுக்குள் நான் பாதுகாப்பாக இருந்தேன். படத்தில் நடித்திருக்கும் சக கலைஞர்களுடன் இதற்கு முன் நான் பணியாற்றியதில்லை. இருந்தாலும் அவர்களுடைய எனர்ஜி, மேஜிக்கை நிகழ்த்தியது. இந்தப் படத்தின் மூலம் மதுமிதா எனக்கு சொந்த சகோதரி போல் ஆகிவிட்டார்.படப்பிடிப்புக்காக படகிற்குள் அமர்ந்து விட்டால் அவ்வளவுதான். அதன் பிறகு படப்பிடிப்பு நிறைவு என்று சொன்ன பிறகுதான் படகிலிருந்து இறங்கி கரைக்கு வருவோம். அதுவரை எங்களுடைய மேக்கப்பை சீராக்கிக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்காது. என்னைப் பொருத்தவரை ஒரு நடிகைக்கு அழகான தோற்றத்திற்கு முக்கியத்துவம் அளிப்பார்கள். ஆனால் இந்த படத்தில் தோற்றத்தை விட ஏற்று நடிக்கும் கதாபாத்திரத்தின் மூலம் நடிப்பை வெளிப்படுத்துவது தான் சிறந்தது என்ற எண்ணம் உதித்தது. இந்த ஒரு விஷயத்தை இந்த படத்தில் கற்றுக் கொண்டேன். மாலி & மான்வி பட தயாரிப்பு நிறுவனத்தில் நான் நடிக்கும் இரண்டாவது படம். அவர்கள் தயாரிப்பில் நான் நடித்த முதல் படமான 'அடியே' திரைப்படமும் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தான் வெளியானது. அந்த வகையில் இந்தப் பட நிறுவனத்துடன் மீண்டும் இணைந்து பணியாற்றியது மகிழ்ச்சியாக இருக்கிறது.இந்தப் படத்திலும் பாடகியாக தான் நடித்திருக்கிறேன். இந்தப் படத்தில் ஜிப்ரானின் இசை அற்புதமாக இருக்கிறது. நானும் அவரின் தீவிர ரசிகை. இந்தப் படத்தில் கானா பாடல் கலந்த ஒரு நாட்டுப்புற பாட்டு இருக்கிறது. அந்த பாடல் காட்சியை நான் நன்றாக ரசித்து அனுபவித்து நடித்தேன். இந்தப் படத்தில் நடித்த ஜெஸ்ஸி ஒரு ஆஸ்திரேலிய நடிகர். எனக்கு கிடைத்த சிறந்த நண்பர். படப்பிடிப்பு தளத்தில் அவருக்கு சில விஷயங்களை மொழிபெயர்ப்பதில் உதவியிருக்கிறேன். இந்தப் படத்தில் என்னை தவிர்த்து என்னுடன் நடித்தவர்கள் அனைவரும் நகைச்சுவை கலைஞர்கள். அதனால் படப்பிடிப்பு தருணத்தின் போது அனைவரும் பேசி காட்சிகளை மேம்படுத்துவார்கள். அதை நேரில் பார்த்து வியந்திருக்கிறேன். எனக்கு அவர்களைப் போல் உடனடியாக காமெடியாக பேச முடியாது, பேசவும் தெரியாது. இது தொடர்பாக இயக்குநரிடம் பேசும் போது, அவர் 'லட்சுமி என்கிற கதாபாத்திரம் ரசிகர்களிடம் நிறைய பேசும்' என்றார். இந்தப் படத்தின் படப்பிடிப்பை பொருத்தவரை எனக்கு ஒரு பயிற்சி பட்டறை போல் தான். தினமும் ஏதாவது ஒரு புதிய விஷயத்தை கற்றுக் கொண்டே இருந்தேன். இந்தத் திரைப்படத்தை திரையரங்கத்திற்கு வருகை தந்து பார்க்கும் போது பிரமிப்பை ஏற்படுத்தும். அந்த அளவிற்கு விஷுவல் ட்ரீட் இருக்கிறது. கடல் பேரழகு. அதனைக் காண ஆகஸ்ட் இரண்டாம் தேதி திரையரங்கத்திற்கு வருகை தந்து இந்த படத்திற்கு ஆதரவு தாருங்கள்,'' என்றார்.

இசையமைப்பாளர் ஜிப்ரான் வைபோதா பேசுகையில், ''சிம்பு தேவனுடன் இணைந்து பணியாற்றும் மூன்றாவது படைப்பு இது. '24ம் புலிகேசி' படத்தில் இணைந்தோம். அதற்காக விவாதித்து பாடல்களையும் உருவாக்கினோம். அவருடன் பணிபுரிந்த அனுபவம் இனிமையாக இருந்தது. அதன் பிறகு அவருடன் ஒரு குறும்படத்தில் இணைந்தேன். அதன் பிறகு இந்தப் படத்தின் கதையை விவரித்தார். கேட்கும்போதே எனக்கு ஆவலாக இருந்தது. முழுவதும் கடல் தானா..! என கேட்டேன். அவர் ஆமாம் என்றார். அத்துடன் ஒட்டுமொத்த படப்பிடிப்பையும் கடலுக்குள் சென்று தான் நடத்த திட்டமிட்டிருக்கிறோம் என்றார். ஆனால் அதன் பின்னணியில் இவ்வளவு கடினமான உழைப்பு இருக்கும் என்று எனக்குத் தெரியாது. பாடலை உருவாக்கும்போது அவருக்குள் எப்போதும் இருக்கும் கவிதைத்தனம் எட்டிப் பார்க்கும். பார்த்திபன் சார் ஒரு விஷயத்தை வெவ்வேறு கோணங்களில் பார்ப்பது போல் சிம்பு தேவன் ஒரு விஷயத்தை வித்தியாசமான கோணங்களில் பார்ப்பார். முதலில் கர்நாடக இசை பாணியில் ஒரு பாடல் என்றார். உடனே நல்லதொரு ராகத்தின் பின்னணியில் நேர்த்தியாக உருவாக்கலாம் என மனதிற்குள் நினைத்தேன். ஆனால் பாடல் வரிகள் சென்னை மக்களின் பேச்சு மொழியில் இருக்க வேண்டும் என்றார். அப்படித்தான் 'சோக்கா..' எனும் பாடல் உருவானது. அடுத்த பாடலை உருவாக்கலாம் என பேச தொடங்கிய போது.. சென்னையில் இசை மொழியான கானா பாடலை உருவாக்குவோம் என்றார். ஆனால் இந்தப் பாடல் கர்நாடக இசையில் பயன்படுத்தும் 'சரிகம' என்ற சொல்லாடலை பயன்படுத்த வேண்டும் என்றார். சிம்பு தேவனின் இந்த முரண்பாட்டை ரசித்தேன். இது சவாலாகவும் இருந்தது. ஏனெனில் இந்தப் பாடலை 'பத்ம பூஷன்' சுதா ரகுநாதன் பாடினார்கள். முதலில் அவரை தொடர்பு கொண்டு விவரத்தை கூறிய பிறகு அவர்கள் பாட சம்மதிப்பார்களா என்ற தயக்கம் எங்களுக்குள் இருந்தது. ஆனால் பாடலைக் கேட்டுவிட்டு, இந்த பாடல் ராகத்தில் அழகாக அமைந்திருக்கிறது, நான் பாடுகிறேன் என்றார். அப்போதுதான் எங்களுக்குள் மகிழ்ச்சி ஏற்பட்டது. இரண்டாவதாக கானா பாடல். கானா என்றவுடன் நம் அனைவரின் நினைவுக்கு வருவது இசையமைப்பாளர் தேவா தான். அவரை தொடர்பு கொண்டு விவரத்தை சொன்ன போது, அவரும் பாடலை கேட்டு விட்டு, மகிழ்ச்சியுடன் பாட ஒப்புக்கொண்டார். இந்த இரண்டு பாடலில் பணியாற்றிய அனுபவம் தனித்துவமாக இருந்தது. சுதா ரகுநாதனின் பாடலுக்கு நடிகை கௌரி கிஷன் பொருத்தமாக இருப்பாரா என்ற சந்தேகம் இருந்தது. ஆனால் அவர் தன்னுடைய நேர்த்தியான நடிப்பால் எங்களை வியக்க வைத்தார். பின்னணி இசைக்காக படத்தின் காட்சிகள் என்னிடம் வந்தன. இதில் எதிர்பாராத விதமாக மிகப்பெரும் சவால் ஒன்று இருந்தது. படத்தின் தொடக்கத்தில் பத்து நிமிடம் வரை காட்சிகள் நிலத்தில் நடைபெறும். அதன் பிறகு கடலுக்குள் சென்று விடும். பிறகு கடலிலிருந்து கடைசி பத்து நிமிடத்தில் மீண்டும் கரைக்கு திரும்புவார்கள். மீதமுள்ள பெரும்பாலான காட்சிகள் கடலில் தான் இருக்கும். அதை பார்க்கும் போது எங்கே முற்றுப்புள்ளி வைப்பது, எங்கே தொடர் புள்ளி வைப்பது என்று தெரியாமல், சிம்பு தேவனை தொடர்பு கொண்டேன். பொதுவாக மாற்றங்கள் இசையமைப்பாளருக்கு உதவி புரியும். ஏதேனும் ஒரு இடையூறு இருக்கும் அல்லது பின்னணியில் மாற்றம் இருக்கும். ஆனால் இந்தப் படத்தில் எங்கு தொடங்குவது எங்கு முடிப்பது என்று தெரியாமல் குழப்பம் ஏற்பட்டது. ஆனால் படத்தில் உணர்வு என்பது தொடர்ந்து நீடித்துக் கொண்டே இருக்கும். அதிலும் அதில் நடித்திருக்கும் நடிகர்கள் அனைவரும் திறமையாக நடித்திருப்பார்கள். ஒருவருடைய நடிப்பிலிருந்து மற்றவர்கள் அதை புரிந்து கொண்டு பேசுவார்கள். அதை துல்லியமாக உணர்ந்து கொண்டு இதற்கு பின்னணி இசை அமைக்க வேண்டியதாக இருந்தது. இந்த படத்தில் இயக்குநர் சிம்பு தேவனை ஒரு தயாரிப்பாளராகவும் பார்த்திருக்கிறேன். கடும் போராட்டத்திற்கு இடையே அனைவரையும் ஒருங்கிணைத்து தன்னுடைய கற்பனையை சாத்தியமாக்கி இருக்கிறார். அவரிடம் இருந்த பாசிட்டிவிட்டி பாராட்டத்தக்கது. திரையரங்கத்திற்கு வருகை தந்து பார்க்க வேண்டிய ஒரு படம் இது. அதனால் அனைவரும் திரையரங்கத்திற்கு வருகை தந்து இந்த படத்தை பார்த்து ரசித்து ஆதரிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்," என்றார்.

நடிகர் யோகி பாபு பேசுகையில், "போட் திரைப்படம் இந்த அளவுக்கு சிறப்பாக உருவாகி உள்ளதற்கு இயக்குநர் சிம்பு தேவன் தான் காரணம், அவருக்கு எனது நன்றி. இப்படத்தின் தயாரிப்பாளர், என்னுடன் நடித்த நடிகர், நடிகைகள் மற்றும் பணியாற்றிய தொழில்நுட்ப கலைஞர்கள் அனைவருக்கும் நன்றி. இங்கு வருகை தந்திருக்கும் பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் நன்றி. கடின உழைப்போடு இப்படம் உருவாகியுள்ளது. நீங்கள் அனைவரும் உங்கள் மேலான ஆதரவை 'போட்' திரைப்படத்திற்கு வழங்க வேண்டும். மிக்க நன்றி," என்று கூறினார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# சீசன் XI-க்கு புதிய இளம் வீரர்களை இணைத்திருக்கும் தமிழ் தலைவாஸ்



சென்னை, 30 ஜூலை 2024: விரைவில் தொடங்கவிருக்கும் கபடி சீசனுக்காக தமிழ்நாடு மற்றும் மஹாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த நம்பிக்கையளிக்கும் திறம்கொண்ட மூன்று இளம் வீரர்கள் தனது அணியில் சேர்க்கப்பட்டிருப்பதை தமிழ் தலைவாஸ் அணி நிர்வாகம் பெருமையுடன் அறிவித்திருக்கிறது. ராம்குமார் மாயாண்டி, தீரஜ் ரவீந்திர பைல்மேரே, மற்றும் அனுஜ் கலுராம் கவாடே என்ற இந்த புதிய வீரர்கள் கபடிக்கான தங்கள் பேரார்வத்துடன் சிறப்பான திறமையையும், தளராத அர்ப்பணிப்பையும் தங்களோடு கொண்டு வருகின்றனர்.

தமிழ்நாட்டை தாயகமாகக் கொண்ட ராம்குமார் மாயாண்டி, ஜூனியர் மற்றும் சீனியர் தேசிய போட்டிகளில் சிறப்பான செயல்வீரராக இருந்திருக்கிறார். கபடி விளையாட்டில் மட்டுமே தனது வாழ்க்கையின் முதன்மை நோக்கமாகக் கொண்டிருக்கும் ராம்குமார், இவ்விளையாட்டில் நிபுணத்துவம் பெறுவதற்காக தனது வாழ்நாளையே முழுமையாக அர்ப்பணித்திருக்கிறார். தளராத கடும் உழைப்பு இவரது முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்திருக்கிறது. கடந்த சில மாதங்கள் காலஅளவின்போது தமிழ்நாடெங்கிலும் நடைபெற்ற பல்வேறு உள்ளூர் போட்டிகளில் தமிழ் தலைவாஸ் பேனரின் கீழ் பங்கேற்று சிறப்பான திறனை இவர் வெளிப்படுத்தியிருக்கிறார். ராம்குமாரின் அர்ப்பணிப்பும், சிறப்பான செயல்திறனும் இந்த அணிக்கு கூடுதல் வலு சேர்க்கும் என்று தமிழ் தலைவாஸ் அணி நம்புகிறது. மஹாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த துடிப்பான ரெய்டராக, தேசிய அளவிலான ஜூனியர் போட்டிகளில் தீரஜ் ரவீந்திர பைல்மேரே, அவரது திறன்களை நிரூபித்திருக்கிறார். இவரது இலாகவம் மற்றும் உத்திவாய்ந்த விளையாட்டு திறனுக்காக பிரபலமாகியிருக்கும் தீரஜ் ப்ரோ கபடி லீக்-ல் சிறப்பான எதிர்காலத்தை கொண்டிருக்கிறார். அவரை வரவேற்பதில் உற்சாகம் கொண்டிருக்கும் தமிழ் தலைவாஸ் அணி, அணியின் ரெய்டுகளுக்கான துறைக்கு ஒரு புதுமையான மற்றும் உத்வேகமிக்க அணுகுமுறையை கொண்டுவருவார் என்று உறுதியாக நம்புகிறது. ப்ரோ கபடி லீக்-ல் விளையாடுவது என்பது தீரஜ்-ன் நீண்டகால விருப்பமாக இருந்து வந்திருக்கிறது. இந்த சீசனுக்காக தமிழ் தலைவாஸ் அணியில் இவர் சேர்க்கப்பட்டிருப்பது இவரது கனவை நிஜமாக்கும். இவரது கடும் உழைப்பும் மற்றும் தொடர்ச்சியாக இவர் வெளிப்படுத்தியிருக்கும் செயல்திறனுமே இதற்குக் காரணம்.

மஹாராஷ்டிராவைச் சேர்ந்த மற்றொரு வீரரான அனுஜ் கலுராம் கவாடே, ஒரு திறமைமிக்க தற்காப்பு வீரராவார். தேசிய அளவிலான ஜூனியர் போட்டிகளில் தனது முத்திரையை பதித்திருந்த இவரது தற்காப்பு திறன்களும் மற்றும் பலமும் தமிழ் தலைவாஸ்-ன் தற்காப்பு செயல்பாட்டுக்கு மதிப்புமிக்க புதிய சேர்க்கையாக இது இருக்கும். தனது வலுவான டிஃபன்ஸ் ஆட்டத்தின் மூலம் அணியின் ஒட்டுமொத்த வெற்றிக்கு சிறப்பான பங்களிப்பை அனுஜ் வழங்குவார் என்று நம்பப்படுகிறது. மூன்று இளம் வீரர்களை அணியில் சேர்த்திருப்பது கபடியில் திறமைமிக்க இளம் வீரர்களை அடையாளம் கண்டு, அவர்களை ஊக்குவிப்பதில் தமிழ் தலைவாஸ் அணி கொண்டிருக்கும் அர்ப்பணிப்புக்கு சான்றாகத் திகழ்கிறது. "தலைவாஸ் குடும்பத்தில் ராம்குமார், தீரஜ் மற்றும் அனுஜ் ஆகிய இளம் வீரர்களை வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இவர்களது சேர்க்கை எமது அணியை மேலும் வலுவாக்குவதுடன், எமது விளையாட்டு திட்டத்திற்கு ஆற்றலையும் மற்றும் புதிய அளவிலான உத்வேகத்தையும் நிச்சயம் கொண்டுவந்து சேர்க்கும் என்று நாங்கள் நம்புகிறோம்," என்று தமிழ் தலைவாஸ் அணியின் தலைமை செயல் அலுவலர் திரு. சுஷன் வஷிஷ்த் கூறினார்.

# ரூ. 265 கோடி நிதித்திரட்டலுக்கு ஒப்புதல் வழங்கியிருக்கும் அப்போலோ மைக்ரோ சிஸ்டம்ஸ் லிமிடெட் - ன் இயக்குநர்கள் குழு

சென்னை, 30 ஜூலை 2024: பிரத்யேகமாக உருவாக்கப்படும் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் எலக்ட்ரோ-மெக்கானிக்கல் தீர்வுகளின் வடிவமைப்பு, மேம்பாடு மற்றும் அசெம்பிளி ஆகியவற்றில் முன்னோடியாக புகழ்பெற்றிருக்கும் அப்போலோ மைக்ரோ சிஸ்டம்ஸ் லிமிடெட், ஒரு வாரண்டுக்கு ரூ. 108 என்ற விலையில் மாற்றக்கூடிய வாரண்டுகளின் வெளியீடு வழியாக ரூ. 264.61 கோடி வரையிலான முதலீட்டு தொகையை திரட்டும் திட்டத்திற்கு அதன் இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்திருப்பதை இன்று அறிவித்திருக்கிறது. நிறுவனத்தின் உறுப்பினர்கள் மற்றும் ஒழுங்குமுறை அதிகார அமைப்புகளின் அனுமதி மற்றும் ஒப்புதலுக்கு இந்த முன்வரைவு திட்டம் உட்பட்டதாகும். இந்நிறுவனத்தின் புரோமோட்டர் குழுவினரோடு சேர்த்து புரொமோட்டர் அல்லாத குழுவில் குறிப்பிட்ட சில அடையாளம் காணப்பட்ட உறுப்பினர்கள் உத்தேசிக்கப்படும் வாரண்டுகள் ஒதுக்கீட்டிற்கு உரியவர்களாக இருப்பார்கள். எமினென்ஸ் குளோபல் ஃபண்டு, நார்த் ஸ்டார் ஆப்பர்சுனிட்டிஸ் ஃபண்டு மற்றும் ஏஜி டைனமிக் ஃபண்ட்ஸ் ஆகியவை உத்தேசிக்கப்பட்டுள்ள வாரண்டு ஒதுக்கீடு நிறுவனங்களுள் சிலவாகும். சமீபத்தில், இந்திய இராணுவத்திடமிருந்து ஒரு செயல்திட்டத்தை பெற்றிருப்பதை இந்நிறுவனம் பெருமிதத்துடன் அறிவித்திருந்தது. இந்நிறுவனத்தின் சிறப்பான திறனைக் கருத்தில்கொண்டு, இந்திய இராணுவத்தால் மேக் மிமி செயல்திட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. இத்திட்டமானது, டி ஏ பி-2020-ன் மேக் மிமி வகையினத்தின் கீழ் வாகனத்தில் பொருத்தப்பட்டிருக்கும் கவுன்ட்டர் ஸ்வார்ம் ட்ரோன் சிஸ்டம் (விஎம்சிஎஸ்டிஎஸ்) (பதிப்பு மி) என்பதன் கொள்முதலுக்கானது. அப்போலோ மைக்ரோ நிறுவனத்திற்கு இத்திட்டம் மிகவும் மதிப்பு வாய்ந்தது மற்றும் இந்நிறுவனம் பெறும் ஃபர்ஸ்ட் மேக் மிமி திட்டம் இதுவே. இத்திட்டத்திலிருந்து உருவாக்கப்பட்ட சிஸ்டம்கள், மிக நவீனமானவை என்பதையும் மற்றும் எதிர்கால பயன்பாட்டிற்குரிய சிறப்புத்தன்மை கொண்டதாக இருக்கின்றன என்பதையும் பகிர்ந்துகொள்வதில் இந்நிறுவனம் மகிழ்ச்சியடைகிறது. இதுவொரு மேக் மிமி செயல்திட்டமாக இருப்பதால், இதில் எந்த செலவுப் பொறுப்பும் இருக்காது.

முன்னதாக, இந்நிறுவனம் தனது வருவாயை மார்ச் 31, 2024 -ல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான வருவாய் மற்றும் நிதிநிலை அறிக்கையை அறிவித்திருந்தது. சிறப்பான ஆர்டர் செயலாக்கத்தின் காரணமாக நிதியாண்டு 24-ல் குறிப்பிடத்தக்க நிதிசார் வளர்ச்சியை இந்நிறுவனம் பெற்றிருந்தது. கியூ4 எஃப்ஒய்24 ல் இதன் வருவாய் ரூ. 1,354.37 மில்லியனாக பதிவானது. இதுவே கியூ4 எஃப்ஒய்23 -ல் 1,068.46 மில்லியனாக இருந்தது. எஃப்ஒய்23 - ம் ஆண்டில் முழு ஆண்டுக்கான வருவாய் 2,975.26 மில்லியாக இருந்த நிலையில், எஃப்ஒய்24-ல் ரூ. 3,716.34 மில்லியன் ரூபாயாக ஒப்பிடும்போது. எஃப்ஒய்23 இல் எம்என் 24.91% வளர்ச்சியை இது பதிவு செய்திருந்தது. கியூ4 எஃப்ஒய்23 ல் 228.83 மில்லியனாக இருந்த எபிட்டா, கியூ4 எஃப்ஒய்24 - ல் ரூ. 287.43 மில்லியன் ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ஒட்டுமொத்த நிதியாண்டிற்கும் இதுவே, ரூ.838.66 மில்லியனாக முந்தைய ஆண்டை விட 25.61% வளர்ச்சியைக் காலாண்டிலும் மற்றும் முழு ஆண்டில் 30.85% வளர்ச்சியையும் பெற்று அதிகரித்திருந்தது. அதிகரித்த இயக்க செயல்பாடுகள் மற்றும் சிக்கனமான செயல்பாடுகளே இதற்கு காரணம். வரிக்குப் பிந்தைய லாபம், கியூ4 எஃப்ஒய்24 - ல் ரூ.129.31 மில்லியனாக பதிவாகியிருக்கிறது. இது ரூ. கியூ4 எஃப்ஒய்23 ல் 72.15 மில்லியனாக இருந்தது மற்றும் எஃப்ஒய்23 -ல் 187.38 மில்லியனாக இருந்த வரிக்குப் பிந்தைய இலாபம், எஃப்ஒய்24-ல் வரிக்கு பிந்தைய லாபம் ரூ. 311.07 மில்லியனாக உயர்ந்திருந்தது. பிஏடி லாப வரம்புகள் கியூ4 எஃப்ஒய்24 - ல் 9.55% மற்றும் முழு நிதியாண்டில் 8.37% ஆக பதிவாகியிருந்தன.

# பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்கு 2வது பதக்கம் கலப்பு இரட்டையர் துப்பாக்கி சுடுதலில் மனு பாக்கர் - சரப்ஜோத் சிங் ஜோடி வெண்கலம் வென்றது



சென்னை, 30 ஜூலை 2024: பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் துப்பாக்கி சுடுதலில் இந்தியாவுக்கு 2வது பதக்கம் கிடைத்துள்ளது. மனு பாக்கர் சரப்ஜோத் சிங் ஜோடி வெண்கல பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

33-வது ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடந்து வருகிறது. இதில் 206 நாடுகளைச் சேர்ந்த 10,500-க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இன்று 4வது நாள் போட்டிகள் தொடங்கின.

கலப்பு இரட்டையர் 10 மீட்டர் துப்பாக்கி சுடுதலில் வெண்கல பதக்கத்துக்கான போட்டியில் இந்தியாவின் மனு பாக்கர் சரப்ஜோத் சிங் ஜோடி தென் கொரியாவைச் சேர்ந்த வோன்ஹோ லீ யீ ஜென் ஜோடியை எதிர்த்து மோதியது. இதில் 16 10 என்ற புள்ளி கணக்கில் இந்தியா ஜோடி வெற்றி பெற்று வெண்கல பதக்கத்தை கைப்பற்றியது. இந்திய ஜோடி மொத்தம் 580 புள்ளிகளுடன் தகுதிச் சுற்றில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் மனு பாக்கர் வெண்கலப் பதக்கம் பெற்றதைத் தொடர்ந்து பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் இரண்டாவது பதக்கம் இது. இதைத் தொடர்ந்து மனு பாக்கர் ஒரு ஒலிம்பிக்கில் 2 பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என வரலாறு படைத்தார்.

# வடக்கன் பெயர், சென்சார் தடையால் மாற்றப்பட்டு, சமீபத்தில் திரையரங்குகளில் வெளியாகி, பரவலான கவனம் பெற்ற, திரைப்படம் ரயில்




சென்னை, 30 ஜூலை 2024: பெரு முதலாளிகள் சாதி, மதங்களைக் கடந்து, சுயநலத்துக்காக எப்போதும் கைக்கோர்த்துக்கொண்டு செயல்படுகிறார்கள். ஆனால். உழைக்கும் மக்கள் எப்போதும் தங்களுக்குள் பகைமை பாராட்டி, அடிப்படைவாதிகளால் அடித்துக்கொள்ளத் தூண்டப்படுகிறார்கள் என்ற கருத்தை மிகவும் அழுத்தமான திரைக்கதையில் ரயில் திரைப்படம் வெளியாகி இருந்தது.

உழைக்கும் தமிழர்கள் குடிநோய்க்கு அடிமையான நிலையில், அவர்களின் வேலை வாய்ப்புகள் பறிக்கப்பட்டு, அந்த இடத்தில் வடநாட்டு கூலிகளை அனுமதிக்கும் தமிழ்நாட்டுச் சூழல் ஒருபக்கம் என்றால், அடையாள அரசியல்வாதிகளின் காட்டமான எதிர்வினை இன்னொரு பக்கம் என அனைத்தையும் கடந்து, ரயில் திரைப்படம், பொதுமக்களாலும் ஊடகங்களாலும் பெரிதும் வரவேற்கப்பட்டது. மேலும், சென்னையில் உள்ள ரஷ்ய கலாச்சார மையம் ரயில் திரைப்படக் குழுவிற்கு பாராட்டு விழா நடத்தி வரவேற்றது குறிப்பிடத் தக்கது.

இந்நிலையில், ரயில் திரைப்படம் ஆஹா ஓடிடி யில் ஆகஸ்ட் 2 ஆம் தேதி முதல் வெளியாகிறது. திரையரங்குகளில் வெளியான நீளத்திலிருந்து 12 நிமிடங்கள் குறைக்கப்பட்டு, ஏற்கனவே பார்த்தவர்கள் கூட மீண்டும் பார்க்கத் தூண்டும் விதத்தில் படம் வெளியாகிறது என்று திரைப்படக்குழு தெரிவித்துள்ளது.

தயாரிப்பு - மு. வேடியப்பன் எழுத்து இயக்கம் - பாஸ்கர் சக்தி ஒளிப்பதிவு - தேனி ஈஸ்வர் இசை - எஸ். ஜே. ஜனனி எடிட்டிங் -நாகூரான் ராமச்சந்திரன் பாடல்கள் - ரமேஷ் வைத்யா. நடிகர்கள் குங்குமராஜ் வைரமாலா பர்வேஸ் மெஹ்ரூ செந்தில் கோச்சடை.

# தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர் ரவீந்தர் சந்திரசேகர் வீட்டில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை



சென்னை, 30 ஜூலை 2024: திரைப்பட தயாரிப்பாளர் ரவீந்தர் சந்திரசேகர் வீட்டில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

சென்னை அசோக் நகர் 19-வது அவென்யூ பகுதியில் தனியார் குடியிருப்பில் வசித்து வருபவர் திரைப்பட தயாரிப்பாளர் ரவீந்தர் சந்திரசேகர். இவர் கவின் நடித்த லிஃப்ட் உள்ளிட்ட சில படங்களை தன்னுடைய லிப்ரா புரொடக்‌ஷன்ஸ் நிறுவனம் மூலம் தயாரித்துள்ளார். இவருக்கு கடந்த 2022-ம் ஆண்டு சீரியல் நடிகை மகாலட்சுமி உடன் திருமணம் ஆனது. இந்நிலையில் இன்று காலை முதல் இவரது வீட்டில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்தாண்டு மோசடி வழக்கில் சிக்கிய ரவீந்தர் சந்திரசேகர், கைது செய்யப்பட்டு சுமார் ஒரு மாத காலம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். கழிவுகளை பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதாக கூறி, சென்னையை சேர்ந்த பாலாஜி என்பவரிடம் இருந்து ரூ.16 கோடி வாங்கி விட்டு ரவீந்தர் ஏமாற்றிவிட்டதாக அவர் மீது சென்னை குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

சுமார் ஒரு மாத சிறை தண்டனைக்கு பின்னர் அவருக்கு நிபந்தனை ஜாமீன் கிடைத்தது. இருப்பினும் ரவீந்தரின் வங்கிக் கணக்கில் இருந்து பணப்பரிவர்த்தனை நடந்திருப்பது பற்றி விசாரணை நடைபெற்று வந்தது. இந்நிலையில் சட்டவிரோத பண பரிவர்த்தனை தொடர்பாக புகார் வந்ததை அடுத்து அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# 30 ஜூலை 2024 அன்று தொடங்கும் பல்க்கார்ப் இண்டர்நேஷனல்-ன் ஐபிஓ




சென்னை, 30 ஜூலை 2024: 2009-ம் ஆண்டில் நிறுவப்பட்ட பல்க்கார்ப் இண்டர்நேஷனல், உணவு தரத்தில் நெகிழ்வுத்திறனுள்ள இன்டர்மீடியேட் பல்க் கன்டெய்னர் (“எஃப்ஐபிசி”) பைகள் உற்பத்தி மற்றும் வழங்கல் செயல்முறையில் ஈடுபட்டுவரும் ஒரு முதன்மை நிறுவனமாகும். இந்நிறுவனம், ஐஎஸ்ஓ 9001:2015, ஐஎஸ்ஓ 14001:2015, ஐஎஸ்ஓ 45001:2018 மற்றும் பிஆர்சி சான்றிதழ் பெற்ற நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது. குஜராத் மாநிலத்தின் அஹமதாபாத் அருகே சங்கோதர் என்ற இடத்தில் இந்நிறுவனத்தின் உற்பத்தி ஆலை அமைந்திருக்கிறது. எஃப்ஐபிசி பைகளைக் (ஜம்போ பைகள்) கொண்டு தனிப்பயனாக்கக்கூடிய பேக்கேஜிங் தீர்வுகளின் விரிவான தொகுப்பை இந்நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறது. பிஆர்சி - ஆல் குறித்துரைக்கப்பட்ட முக்கியமான பாதுகாப்பு மற்றும் தூய்மை விதிகளை தவறாமல் கடைபிடிப்பதன் வழியாக உற்பத்தி ஆலை வளாகத்தில் அதிக பாதுகாப்பையும் மற்றும் துப்புறவு நிலையையும் இந்நிறுவனம் உறுதிசெய்து வருகிறது. வேகமாக வளர்ச்சியடைந்துவரும் பல்க்கார்ப் இண்டர்நேஷனல் நிறுவனம், ஒவ்வொன்றும் ரூ. 10 முகமதிப்புள்ள 19,78,800 என்ற எண்ணிக்கை வரையிலான புதிய ஈக்விட்டி பங்குகளை வெளியிட்டு முதலீட்டை திரட்ட திட்டமிட்டிருக்கிறது. ஆன்கர் முதலீட்டாளர் ஏல தேதி: திங்கள், 29 ஜூலை 2024, ஐபிஓ பங்கு வெளியீடு தொடங்கும் நாள்: செவ்வாய், 30 ஜூலை 2024, ஐபிஓ பங்கு வெளியீடு நிறைவடையும் நாள்: வியாழன், 1 ஆகஸ்ட், 2024, வெளியீட்டின் அளவு: ரூ. 20.78 கோடி, விலை வரம்பு: ரூ. 100 முதல் ரூ. 105 வரை , முக மதிப்பு: ரூ. 10

வெளியீட்டின் வகை: 100% புக் பில்ட், பங்குகளின் எண்ணிக்கை: 19,78,800

இந்த ஐபிஓ பங்கு வெளியீட்டின் மூலம் திரட்டப்படும் தொகையானது, நிறுவனத்தின் நடப்பு மூலதன தேவைகளுக்காகவும் மற்றும் மூலதன செலவுக்காகவும் மற்றும் பொது கார்ப்பரேட் நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படும்.

# பங்கு பிரிப்பிற்கான செயல்திட்டத்தை பரிசீலிக்கும் ஹசூர் மல்டி ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட் - ன் இயக்குனர்கள் குழு

சென்னை, 30 ஜூலை 2024: ஹசூர் மல்டி ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட், பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான (இபிசி) ஒப்பந்த சேவைகள் துறையில் ஒரு முன்னணி நிறுவனமாக இயங்கி வருகிறது. நிறுவனத்தின் ஈக்விட்டி பங்குகளைப் பிரிப்பதற்கான / பகுப்பதற்கான முன்வரைவு திட்டத்தை பரிசீலனை செய்வதற்கான தனது இயக்குனர்கள் குழு கூட்டம் 2024 ஜுலை 26 அன்று கூடி விவாதிக்கிறது என்பதனை இந்நிறுவனம் அறிவித்திருக்கிறது. இந்த ஆண்டின் தொடக்கத்தில், முழுமையாக மாற்றத்தக்க வாரண்டுகளை ஒரு வாரண்டிற்கு ரூ. 300 என்ற வெளியீட்டு விலையில் முன்னுரிமை வெளியீடு வழிமுறையின் மூலம் ரூ.4860 மில்லியன் என்ற நிதியை திரட்டுவதற்கு இந்நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு ஒப்புதல் அளித்திருந்தது. இந்த வெளியீட்டு நடவடிக்கை, நிறுவன உறுப்பினர்களது ஒப்புதல் மற்றும் அவசியமான அதிகாரப்பூர்வ அமைப்புகளின் அனுமதிக்கு உட்பட்டது. முன்மொழியப்படும் முன்னுரிமை வாரண்ட்டுகளை பெறுபவர்களில் எஃப்ஐஐ-கள் மற்றும் இந்நிறுவனத்தின் புரமோட்டர்கள் அல்லாத குழுவிலிருந்து பிற முதலீட்டாளர்களும் இடம்பெறுகின்றனர். அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்தை அதிகரிப்பதற்கும் மற்றும் இந்த மூலதன நிதி திரட்டலுக்கான ஒரு குழுவை அமைப்பதற்கும் இதன் இயக்குனர்கள் குழு ஒப்புதல் அளித்திருக்கிறது.

இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் உள்கட்டமைப்பு செயற்பிரிவின் முன்னணியில் ஹசூர் மல்டி ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட் உள்ளது. உயர்தர மற்றும் நம்பகமான பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான (இபிசி) ஒப்பந்த சேவைகளை வழங்குவதற்கான ஒரு தொழிற்பிரிவை உருவாக்கி வளர்ச்சி காண செய்திருப்பதன் மூலம் இதை அது சாதித்திருக்கிறது. தேசத்தின் கட்டமைப்பு செயல்பாட்டில் அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், இத்தொழில்துறையில் ஒரு முக்கிய பங்களிப்பு செய்யும் நிறுவனமாக மிக விரைவாக எச்எம்பிஎல் உருவெடுத்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளில், மகாராஷ்டிரா மாநில சாலை மேம்பாட்டுக் கழகத்திற்கான (எம்எஸ்ஆர்டிசி) முன்னணி திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொண்டு வருவதன் மூலம், குறிப்பிடத்தக்க மைல்கற்களை எச்எம்பிஎல் அதன் வளர்ச்சி பயணத்தில் எட்டியுள்ளது. குறிப்பிடத்தக்க வகையில், கோவிட்-19 பெருந்தொற்றால் ஏற்பட்ட சவால்களுக்கு மத்தியிலும், 2019 ஆம் ஆண்டில் வாக்கன் - பாலி நெடுஞ்சாலை திட்டம் இந்நிறுவனத்தால் வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. கௌரவம் மிக்க சம்ருத்தி விரைவுச் சாலையின் தொகுப்பு 11-ன் பணிகளை எடுத்து நிறைவேற்றியதன் மூலம் என்எச் 48 நெடுஞ்சாலைத் திட்டத்திற்கு பங்களிப்பை வழங்கி தனது செயலிருப்பை இந்நிறுவனம் மேலும் வலுப்படுத்தியிருக்கிறது ; திட்ட செயலாக்கத்தில் நேர்த்தி நிலை மீதான பொறுப்புறுதியை இதன் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறது.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (30.07.2024), சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரையிலும் மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வியிலும் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000/- உதவித்தொகை வழங்கும் "தமிழ்ப்புதல்வன் திட்டம்" வருகின்ற ஆகஸ்ட் 9ம் தேதி செயல்படுத்தப்படவுள்ளதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள், கல்லூரி தொடர்பு அலுவலர்கள் மற்றும் வங்கியாளர்களுடனான முன்னேற்பாட்டுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கோ.லட்சுமிபதி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.துரைராஜ் அவர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.விக்னேஷ்வரன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஹவுரா - மும்பை எக்ஸ்பிரஸ் ரெயில் தடம் புரண்டு விபத்து: 2 பேர் பலி 20 பேர் காயம்

சென்னை, 30 ஜூலை 2024: ஜார்க்கண்ட் மாநிலத்தின் ராஜ்கர்சவான் ரயிவே நிலையம் அருகே ஹவுரா - மும்பை விரைவு ரயில் தடம்புரண்டு 2 பேர் உயிரிழந்தனர். 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஜார்க்கண்ட் மாநிலத்தின் ராஜ்கர்சவான் ரெயில் நிலையம் அருகே சரைகேலா என்ற பகுதியில் சரக்கு ரயில் தடம் புரண்டு நின்று கொண்டு இருந்தது. அதிகாலை 3:43 மணியளவில் ஹவுரா மும்பை ரெயில் (ரயில் எண்: 12810) ஜார்க்கண்ட் மாநிலத்தின் ராஜ்கர்சவான் ரயில் நிலையத்தை கடந்து சென்றபோது தடம் புரண்ட சரக்கு ரயிலின் பக்கவாட்டில் மோதியது. இதில் ஹவுரா ரெயிலின் 12 ரயில் பெட்டிகள் தடம் புரண்டன. இந்த விபத்தில் இடிபாடுகளில் சிக்கி 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 20க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர்.

இந்த சம்பவம் குறித்து ரயில்வே துறை அதிகாரிகள் மாநில பேரிடர் மீட்புக் குழு மற்றும் தீயணைப்புத் துறையினருக்கு தகவல் அளிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு உடனடியாக விரைந்து வந்த மாநில பேரிடர் மீட்புக் குழு, தீயணைப்புத் துறையினர் ரயிலில் ஈடுபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்டு வருகிறனர். சிறிய அளவிலான காயங்கள் ஏற்பட்டுவர்களுக்கு நிகழ்விடத்திலேயே முதலுதவி அளிக்கப்பட்டது. மேல் சிகிச்சை தேவைப்படுவர்களுக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஹெல்ப்லைன் எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளன:

ஜிஎஸ்எம்டி - 022-22694040, தாதர் - 9136452387, கல்யாண் - 8356848078, தானே - 9321336747, டாடாநகர்: 06572290324, சக்ரதர்பூர்: 06587 238072, ரூர்கேலா: 06612501072/ 06612500244, ஹவுரா: 9433357920/ 03326382217, ஜர்சுகுடா: 06645-272530.

# பெரும்பாக்கம் ஜெயா நகரில் ஏஜி&பி பிரதம் நிறுவனத்தின் இயற்கை எரிவாயு குழாயில் சேதம்: காவல் நிலையத்தில் புகார்

காஞ்சிபுரம், 30 ஜூலை 2024: ஏஜி&பி பிரதம் நிறுவனம் வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் எல்பிஜி கியாசுக்கு மாற்றாக இயற்கை எரிவாயுவை குழாய் மூலம் இந்தியா முழுவதும் தமிழ்நாடு உட்பட பல்வேறு மாநிலங்களில் வழங்கி வருகிறது.

இந்நிலையில் பெரும்பாக்கம் ஜெயா நகரில் கடந்த 23-ந்தேதி கழிவுநீர் குழாய் அமைக்கும் பணிக்காக ஜேசிபி எந்திரம் கொண்டு பள்ளம் தோண்டியபோது அங்கு பதிக்கப்பட்டு இருந்த ஏஜி&பி பிரதம் நிறுவனத்திற்கு சொந்தமான இயற்கை எரிவாயு குழாயில் சேதத்தை ஏற்படுத்தியது. இதன் காரணமாக எரிவாயு கசிவு ஏற்பட்டது. இது குறித்து தகவல் கிடைத்து வந்த இந்நிறுவனத்தின் ஊழியர்கள் அதை உடனடியாக சரி செய்து அப்பகுதிக்கான எரிவாயு வினியோகத்தை சீர்செய்தனர். இந்த சம்பவம் குறித்து பெரும்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

நடப்பு சட்டத்தின்படி ஐபிசி பிரிவு 285 மற்றும் 336-ன் கீழ், அனுமதி பெறாமல் மேற்கொள்ளப்படும் இதுபோன்ற பணிகளால் ஏற்படும் சேதங்களுக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் 25 கோடி ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.

அரசு சட்டத்தின்படி, மூன்றாம் தரப்பினர் பள்ளம் தோண்டும் பணிகளைத் தொடங்க திட்டமிட்டால், அவர்கள் நகராட்சி அல்லது நகர எரிவாயு வினியோக நிறுவனத்திற்கு 'தோண்டுவதற்கு முன் தொடர்பு கொள்ளுங்கள்' என்னும் எண்ணிலும் ஏஜி&பி பிரதம் நிறுவனத்தின் கட்டணமில்லா எண். +91 8056847333/1800-2022-999 மூலம் தெரிவிக்க வேண்டும்.

சட்டத்தை பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும், இதுபோன்ற அலட்சியங்களைத் தவிர்ப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியும், மூன்றாம் தரப்பினரால் எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகளைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதை இந்த சம்பவம் மீண்டும் வலியுறுத்துகிறது என்று இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (30.07.2024), சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரையிலும் மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வியிலும் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000/- உதவித்தொகை வழங்கும் "தமிழ்ப்புதல்வன் திட்டம்" வருகின்ற ஆகஸ்ட் 9ம் தேதி செயல்படுத்தப்படவுள்ளதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள், கல்லூரி தொடர்பு அலுவலர்கள் மற்றும் வங்கியாளர்களுடனான முன்னேற்பாட்டுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கோ.லட்சுமிபதி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.துரைராஜ் அவர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.விக்னேஷ்வரன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.